**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.8/2021 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு.ஜெயகோஷ் |
| Father Name | திரு.கே.வி.ராமகிருஷ்ண ரெட்டி |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **16.03.2026.**

**1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–**

என் தகப்பனார் ராமகிருஷ்ண ரெட்டியார் 1982–ல் இறந்தார். அப்போது எனக்கு 23 வயது ஆகும். நான் அப்போது M.Com இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருந்தேன். என் தம்பி 1–ம் பிரதிவாதி என்னை விட 9 வயது இளையவர். என் தந்தை இறந்த போது 1–ம் பிரதிவாதி பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார். என் தகப்பனார் விவசாயமும், பொது பணி துறை மற்றும் நெடுஞ்சாலை துறையில் ஒப்பந்ததாரராகவும், உரக்கடை வைத்தும், செங்கல் சூளை வைத்தும், ஜல்லி உடைக்கும் நிறுவனத்தில் பங்குதாரராகவும் தொழில்கள் செய்து வந்தார். என் அப்பா இறந்தவுடன் விவசாயத்தையும், ஜல்லி உடைக்கும் நிறுவனத்தையும் நான் நடத்தி வந்தேன். 1982 இறுதியில் நான் என் பெயரை பொதுப்பணி துறை மற்றும் நெடுஞ்சாலை துறையில் ஒப்பந்ததாரராக பதிவு செய்தேன். என் தந்தையின் பெயரிலிருந்த ஒப்பந்த உரிமை அவர் இறந்த பிறகு முடிந்துவிட்டதால் நான் என் பெயரில் புதிதாக பதிவு செய்தேன். என் தந்தை ஒப்பந்தம் செய்து பாதியில் விட்டு போன வேலைகளை நான் அவர் இறந்த பிறகு தொடர்ந்து எடுத்து செய்தேன் என்றால் என் தந்தை எந்த வேலையையும் விட்டு போகவில்லை. என் தந்தைக்கு ஒப்பந்த வேலையில் வர வேண்டிய பணம் எதையும் அவர் இறந்த பிறகு நான் வாங்கவில்லை. எனக்கு 1984–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் திருமணம் நடந்தது. என் தந்தை விட்டுச் சென்ற சொத்துகளை இன்று வரை நான் நிர்வாகம் செய்து வருகிறேனா என்றால் அந்த சொத்துகளில் வருமானம் எதுவும் இல்லை. நானும், 1–ம் பிரதிவாதியான என் தம்பியும் அந்த சொத்துகளை பராமரித்து வருகிறோம். எங்களுக்கு சுமார் 30 ஏக்கர் சொத்துகள் உள்ளது. அவற்றில் 12 ஏக்கர் நிலத்தில் தென்னை மரங்கள் இருந்தது. முக்கால்வாசி மரங்கள் பராமரிப்பு இல்லாததால் அந்த மரங்களில் மகசூல் ஏதும் இல்லை. மீதி சொத்துகளில் கரும்பு, நெல் பயிரிட்டோம். தற்போது தரிசாக உள்ளது. செங்கல் சூளை 2009–ம் ஆண்டு வரை நடத்தினோம். 1987–ம் ஆண்டு வரை உரக்கடையை நடத்தினோம். நான் தனிப்பட்ட முறையில் தொழில் எதுவும் செய்யவில்லை. என் அப்பாவிற்கு சொந்தமான சொத்துகளிலிருந்து வரும்

வருமானத்தை தவிர எனக்கு வேறு தனிப்பட்ட வருமானம் இல்லை. என் தந்தை கட்டிய இரண்டு வீடுகளில் நான் ஒரு வீட்டிலும், 1–ம் பிரதிவாதி ஒரு வீட்டிலும் குடியிருந்து வருகிறோம். எனக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள் உள்ளனர். என் முதல் மகன் MBBS, M.S, MCH படித்துள்ளார். அவரை தனியார் மருத்துவக் கல்லூரியில் அரசு கட்டணத்தில் படிக்க வைத்தேன். நான் என் முதல் மகனை ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் நன்கொடை கொடுத்து MBBS படிப்பில் சேர்த்தேன் என்றால் சரியல்ல. M.S படிப்பை மணிபாலில் உள்ள தனியார் மருத்துவக்கல்லூரியில் அரசு கட்டணத்தில் படித்து முடித்தார். என்னுடைய மற்றொரு மகனை தனியார் பொறியியல் கல்லூரியில் படிக்க வைத்தேன் என்றால் சரிதான். அவர் B.Tech முடித்து M.B.A படித்து முடித்துள்ளார். என் மகள் தனியார் கலை கல்லூரியில் B.C.A படித்தார். அரசு கட்டணத்தில் M.C.A படிப்பு முடித்தார். என் மகன்கள் மற்றும் மகளுக்கு சிறப்பான முறையில் திருமணம் செய்து வைத்தேன் என்றால் சரிதான். என்னுடைய மகளுக்கு நான் திருமண செலவு ஏதும் செய்யவில்லை. என் மாமனார் செலவு செய்தார். என்னுடைய இரண்டு மகன்களுக்கும் நான் திருமண செலவு ஏதும் செய்யவில்லை. நான் தற்போது எந்த தொழிலும் செய்யவில்லை. என் அப்பாவிற்கு சொந்தமான கடைகளிலிருந்து வரும் வாடகை வருமானத்தை மட்டும் பெற்று வருகிறேன்.

(1–ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.